சார்பு நீதிமன்றம் மதுராந்தகம்

MCOP No. 24/2021

பெயர். திரு. முத்துவேல் த/பெ. பெருமாள் நாள் 05.08.2025

**மனுதாரர் சா.1 அழைக்கப்பட்டு சத்திய பிரமாணம் செய்யப்பட்டு 2ம் எதிர்மனுதாரர் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) விபத்து குறித்து எனக்கு நேரடியாகத் தெரியாது என்றாலும், என் தகப்பனாரின் தொழில் மற்றும் வருமானத்தை நிரூபிக்க ஆவணங்கள் தாக்கல் செய்யவிலலை என்றாலும் சரிதான். விபத்து சம்மந்தமாக புகாரை 5ம் மனுதாரர் அளித்தார் என்றால் சரிதான். அவர் சொல்லியுள்ள விவரங்கள் உண்மைதான் என்றால் சரிதான். ம.த.சா.ஆ.4ல் உள்ள பெயர் மற்றும் விலாசம் ஆகிய விவரங்கள் சரியானவை என்றால் சரிதான். பிரேத விசாரணையில் என் தகப்பனாருக்கு தலையில் ஏற்பட்ட காயத்தினால் இறப்பு ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் தலையிலும், காலிலும் ஏற்பட்ட காயத்தினால் என்று குறிப்பிடப்பட்டுள்ளது. மனுவில் என் தகப்பனார் தலைக்கவசம் அணிந்து சென்றதாக குறிப்பிடவில்லை என்றால் சரியல்ல. தலைக் கவசம் அணிந்திருந்திருந்தால் தலையில் காயம் ஏற்பட்டிருக்காது என்று சொன்னால் சரியல்ல. என் தகப்பனார் இருசக்கர வாகனம் ஓட்டிச் சென்றார் என்றால் சரிதான்.

2) என் தகப்பனார் விபத்து தேதியில் என் ஊரில் இருந்து மாமண்டுரில் உள்ள இந்தியன் வங்கிக்கு சென்றார் என்றால் சரிதான். உத்திரமேரூர், திண்டிவனத்தில் இருந்து சென்னை செல்லும் சாலையில் இடப்பக்கம் உள்ளது என்றால் சரிதான். நான் கூறும் வங்கி சென்னையில் இருந்து திண்டிவனம் நோக்கி செல்லும் சாலையில் இடப்புறம் உள்ளது என்றால் சரிதான். அவ்வாறு சாலையைக் கடக்கும் பொழுதுதான் விபத்து எறப்பட்டது என்றால் சரியல்ல. என்

தகப்பனாரின் இருசக்கர வாகன ஓட்டுநர் உரிமத்தை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். இருசக்கர வாகனத்திற்கான காப்பீடு தாக்கல் செய்யவில்லை என றாதல் சரிதான். எங்களுடைய வாரிசு சான்றிதழை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். நாங்கள் இறந்தவரின் முறையான வாரிசுகள் இல்லை என்றால் சரில்ல. முறையான வாரிசுதாரர்களை தரப்பினர்களாக சேர்க்காத காரணத்தால் என்னுடைய மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

3)குற்ற வழக்கில் பதியப்பட்ட குற்ற இறுதி அறிக்கையை தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். குற்ற வழக்கு அற்றுப்போனதாக இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்து என்றால் சரியல்ல. என் தகப்பனார்தான் தவறுதலாக வாகத்தை ஓட்டி விபத்தை ஏற்படுத்திக் கொண்டார் என்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் எனக்குத் தெரியாது. விபத்து முழுக்க முழுக்க என் தகப்பனாரின் கவனக்குறைவு மற்றும் அஜாக்கிரையால் ஏற்பட்டது என்றால் சரியல்ல 1ம் எதிர்மனுதாரர் வாகன ஓட்டுநரால் ஏற்படவில்லை என்றால் சரியல்ல. அதனால்தான் குற்ற வழக்கு கைவிடப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் முதல் எதிர்மனுதாரர் மீது உள்ள அஜாக்கிரதை மற்றும் கவனக்குறைவை நிரூபிக்க தவறிவிட்டேன் என்றால் சரியல்ல. 2ம் எதிர்மனுதாரரைப் பொறுத்து என்னுடைய மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல. நான் கோரியுள்ள இழப்பீட்டுத் தொகை மிக அதிகம் என்றால் சரியல்ல.

மறுவிசாரணை –இல்லை.